DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No. 235 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 15 | நாள் | : | 13.11.2025 |
| பெயர் | : | டாக்டர் மாரிராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 13th day of November 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.07.2018 அன்று பணியிலிருந்தபோது கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய பெண் காவலர் அக்சாள் என்பவர் காவல் ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்துடன் வந்திருந்தார். அவர் கொடுத்த வேண்டுகோளை பரிசீலித்து அவர் அடையாளம் காட்டிய சுமார் 35 வயதுடைய பெண் சடலம் சங்கரேஸ்வரி என்று அடையாளம் காட்டப்பட்ட சடலத்தை சடலக்கூராய்விற்கு எடுத்துக் கொண்டேன். மதியம் 2.15 மணிக்கு சடலம் கூராய்விற்கு கொண்டுவரப்பட்டபோது அதில் இரண்டு கைகள் மற்றும் இரண்டு

கால்களில் பிண விரைப்பு தன்மை காணப்பட்டது. நாக்கு உட்புறமாக இருந்தது.

வெளிப்புறகாயங்கள்

1) 7x4x எலும்பு ஆழத்தில் சிதைந்த காயம் வலது பின் தலையில் இரத்த உறைவுடன் காணப்பட்டது.

2) 1 வது காயத்திற்கு சற்று மேல்புறமாக 4x3 செ.மீ. எலும்பு ஆழம் அளவிலான ஒரு சிதைந்த காயம் இரத்த உறைவுடன் காணப்பட்டது.

சடலத்தை உட்கூராய்வு செய்ததில் நுரையீரல் மற்றும் இருதயம் வெளிறியும், இயல்பாகவும் காணப்பட்டது. நாவடி எலும்பு சீராக இருந்தது. வயிற்றின் உட்பகுதியில் 100 கிராம் அளவில் உள்ள செரிக்காத உணபுப்பொருள் காணப்பட்டது. அதில் குறிப்பிடத்தக்க வாடை ஏதும் இல்லை. கல்லீரல், கணையம், மண்ணீரல், மற்றும் சிறுநீரகங்கள் வெளிறியும் இயல்பாகம் காணப்பட்டது. பிறப்புறுப்பில் காயங்கள் ஏதும் இல்லை. காபாழத்தில் 8 செ.மீ. அளவிற்கு எலும்பு முறிந்த காயம் 100 மில்லி இரத்த உறைவுடன் மூளையை அழுத்திய நிலையில் காணப்பட்டது. மூளை அதனை சுற்றியுள்ள சவ்வு பகுதிகள் வெளிறி காணப்பட்டது. சடலத்திலிருந்து அதன் உள்ளுறுப்புகளை இரசாயண பகுப்பாய்வுக்காக சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது. தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து வரப்பெற்ற அறிக்கையின் அடிப்படையில் சடலம் சடலக்கூராய்விற்கு 18 முதல் 24 மணி நேரத்திற்கு முன்பு இறந்திருக்கக்கூடும் என்றும் தலையில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக அதிர்ச்சி மற்றும் இரத்தப்போக்கினால்

இறந்திருக்கக்கூடும்  என்று சான்று வழங்கினேன். எனது அறிக்கை அ.சா.ஆ.20

ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்குவிசாரணை இல்லை**</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.13 18:23:03 +0530

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No. 235 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 14 | நாள் | : | 13.11.2025 |
| பெயர் | : | டாக்டர் முத்துக்குமார் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 13th day of November 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடக்குபுதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் பணிபுரிந்தபோது கடந்த 28.07.2018 ம் தேதி இரவு 10 மணியளவில் மரத்தோணியைச் சேர்ந்த முருகலட்சுமி என்பவர் அவரது கணவருடன் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரை விசாரித்தபோது 28.07.2018 ம் தேதி மாலை 6.45 மணிக்கு தெரிந்த நபரால் காயம் ஏற்படுத்தப்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார் அவரை பரிசோதித்ததில் இடது முன் கையில் வீக்க காயம் இருந்தது எனவே அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சையின் அடிப்படையில் அவருக்கு சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன்.

நான் வழங்கிய சான்று அ.சா.ஆ.19 ஆகும். சவுக்கு கட்டையால் தாக்கப்படும்போது இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஆவணங்கள் புதிதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் நகல் இன்று வழங்கப்பட்டுள்ளதாலும் குறுக்குவிசாரணை செய்ய கால அவகாசம் கோரி அனுமதிக்கப்பட்டது.**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.13 18:23:10 +0530

**DEPOSITION OF WITNESS**
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.**

**SC.No. 235 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 13 | நாள் | : | 13.11.2025 |
| பெயர் | : | அக்சாள் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 13th day of November 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வள்ளியூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது கடந்த 29.07.2018 தேதி மதியம் 1.40 மணிக்கு காவல் ஆய்வாளர் உத்தரவுப்படி கடவுச் சீட்டுப்பெற்று அவர் கொடுத்த வேண்டுகோளின்படி சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை பிரேத அறையிலிருந்த சடலத்தை அடையாளம் காட்டி சடலக்கூராய்விற்கு மருத்துவ அலுவலரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் சடலக்கூராய்வு முடித்து சடலத்தை உறவினர்களிடம் நல்லடக்கத்திற்காக ஒப்படைத்தேன். சடலக்கூராய்வின போது உடலிலிருந்து கைப்பற்றப்பட்ட உடைகளை

நிலையத்தில் ஒப்படைத்து எனக்கிட்ட பணியை முடித்து அறிக்கை செய்தேன். எனக்கு வழங்கப்பட்ட கடவுச் சீட்டு அ.சா.ஆ.18 ஆகும். கடந்த 06.08.2018 அன்று சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சேகரித்து வைக்கப்பட்ட பொருட்களை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து நிலையம் திரும்பி அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஆவணங்கள் புதிதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் நகல் இன்று வழங்கப்பட்டுள்ளதாலும் குறுக்குவிசாரணை செய்ய கால அவகாசம் கோரி அனுமதிக்கப்பட்டது.**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.13 18:23:16 +0530